Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஇ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- குரோதி ஸூ சித்திரை மீ உசுஉ வெள்ளிக்கிழமை (8 May. 1964) [இல-ரு]

## நீதி வடிவான இறைவனை அடையும் வழி

[மானிப்பாய் இந்துக்கல்லூரித் திருவிழாத்தினத்தன்று திருக்கேதீஸ்வரத்தில் ஆசிரியர் திரு. அ துரைரத்தினம் அவர்கள் 'நீதி' என்னும் பொருள்பற்றி நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்].

நீதி எல்லோருக்கும் பொதுவானது. இதனைத் தெரியாதார் மிக மிகச் சிலரே. ஒருவனுடைய தோட்டத்தில் ஒரு பூசினிக் காயையோ அல்லது ஒரு மாங் கனியையோ திருடிச் செல்பவன் அதனைச்சொந்தக்காரனாவது வேறு யாராவது காண முடியாதவகையில் மறைத்துச் செல்லும் போது தான் செய்வது பிழையென்பது நன்ருகத் தெரியும். தனது பொருளை ஒருவன் இங்ஙனம் திருடிச் செல்வதைக் கண்டால் உடனே அவனைப் பிடித்துத் துன்புறுத்துவான், ஆகவே சரியெது பிழையெது என்பது பலருக்கும் நன்ருக விளங்கும். குறைபாடான கரணங்களுள்ள ஒரு சிலருக்குமாத்திரமே நீதி விளங்காமலிருக்கலாம்.

நீதி நெறியிற் செல்பவன் தான் பெற்ற அறிவாகிய வெளிச்சத்திற் செல்லுகிருன். அல்லாதவன் ஆசையாகிய இருளிற் செல்லுகிருன்.

"சாதி யிரண்டொழிய
வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில்—
மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார்
இழி குலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி"
(ஔவையார்)

நீதி நெறியைப் பெருநெறி, நன்னெறி, உய்யுநெறி, அருள்நெறி, செந்நெறி என்றும் நீதியற்ற நெறியைப் புன்னெறி, சிறுநெறி என்றும் கூறுவர்.

நீதி விளங்கினாலும் அதனை அறிந்தவாறு சாதிப்பவர்களைக் காண்பது மிக மிக அருமை நீதியை நடுவு நிலைமையாகச் சாதித்தால் நீதியின் வடிவமாயுள்ள இறைவனைக் காணலாம். இறைவன் நீதியின் வடிவமாயிருக்கிருரென்பதை,

"நீதி நின்னை யல்லால்
நெறியாதும்
நினைந் தறியேன்"

என்ற திருஞான சம்பந்த மூர்த்திசுவாமிகள் திருவாக்காலும்,

"பங்கயத்தயனும்
மாலறியா நீதியே"

என்ற திருவாசகப் பகுதியாலும் அறியலாம். இந்த நீதி வடிவத்தைத் தரும நெறியிற் சென்று கண்டவன் மனுநீதி கண்டசோழன். தன்னுடைய மகனின் தேர்க் காலிலகப்பட்டு உயிரிழந்த பசுக்கன்றின் தாயைப்போலத் தானும் துயரெய்தவேண்டுமென்று தன் மகனைத் தேர்க்காலில் நெரித்தமையை,

"ஒருமைந்தன் தன்குலத்துக்
குள்ளா னென்பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை
கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழியுற
வூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ
மற்றெளிதோ தான்".

என்று சேக்கிழார் சுவாமிகள் வியக்கின்ருர். இந்நிலையில் அடியார் பெரு

தொடர்ச்சி 2ம் பக்கம்

### நற்சிந்தனை
(தாலாட்டு)

சித்தத்தி லூறும்
தெவிட்டாத தெள்ளமுதே
அத்தனே! ஆருயிரே!!
ஆண்டவனே கண்வளராய்.

## சைவப்புலவர் செல்வி. கு. மனோன்மணி அவர்கள்



இவர், 1963-ல் தென்னிந்திய சை. சி. சமாஜத்தார்நடாத்திய சைவப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் முதல்வராகத் தேறி; ஷ சமாசத்தார் கௌரவித்தளிக்கும் பரிசுத் தொகை ரூபா 150 ஐப் பெறுபவராவர்.

தாம் அடைந்த இப்பேறு, தம் ஆசிரியர்களாகிய வித்துவான் கந்தசாமி, பண்டிதர் ச. பொன்னுத்துரை என்போர் பிரதியுபகாரங் கருதாது தேவையான நூல்களையுதவியும் சிரமத்தைப் பொருட்படுத்தாது மனமுவந்து ஐயந்திரிபறக் கற்பித்தும் வந்தமையாலேயே கிடைத்ததென நன்றிமறவாக் கடப்பாட்டோடு கூறும் இவரது மரபு தவருக் குருபத்திக் குணநலம் யாவராலும் பாராட்டுதற்குரியது. ஏனைச் சைவமாணவர்கள் இச் செல்வியின் ஆற்றலையுங் குணநலங்களையும் முன் மாதிரியாகக் கொண்டொழுகி முன்னேறுவார்களாக.

### நாவலர் நல்வாக்கு

● சரீரம் நீங்கும்போது சிவத்தியானம் செய்க

அவாவே பிறவிக்கு வித்து. ஆதலால் சரீரம் நீங்கும் பொழுது யாதொருபொருளையும் அவாவாமல், சிவனுடைய திருவடிகளையே, அழலிடைப்பட்ட மெழுகு போல மனம் கசிந்துருக, உரோமம்சிலிர்ப்ப, ஆனந்த அருவிசொரிய, இடையருது தியானித்தல்வேண்டும். இதற்குப் பிரமாணம் சோமவார விரத கற்பம்,

"மரிக்கும்போ தூன்னும்
வடிவினை யாவி
பரிக்கு நினைவு பரித்து.
'ஆதலினற் சுற்றத் தவரை
நினையா தமலன்
பாத நினைக்கப் பரிந்து"

வாணுள்முழுதும் உயிர்ச்சார்பினும் பொருட்சார்பினும் சிறிதும் உள்ளே பற்று வையாமல், நிற்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும்போதும், நடக்கும் போதும், இடையருத மெய்யன்போடு சிவதியானம்செய்தவர்க்கே, இறக்கும்போதும் அச் சிவத் தியானம் கைகூடும். ஆதலால், சிவனை எந்நாளும் இடையருது தியானம் பண்ணுக.

"நின்று மிருந்துங் கிடந்து
நடந்து நினை —
யென்றுஞ் சிவன்ருளிணை".

என்று வருத்தமறவுய்யும் வழியிலே கூறப்பட்டமை காண்க.

## ஈசன் திருவடியன்பு வீடுபேறவிக்கும்

### ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை அவர்கள்

(முற்ருெடர்-2)

புழுவாய்ப்பிறந்தாலும் புனிதன் பொற்கழலை மறவாத உணர்வைக்கொடுக்க வரம் வேண்டுமென்கின்ருர் நாவுக்கரசர்; அவன் கழல் ஓர் பெரிய கனி. மலையே வந்து விழுந்தாலும் நிலையில் நின்று கலங்கப்படாதென்கிருர் நாவுக்கரசர். கற்க வாயும் நாவுமுளதாதலாலும் இறைவனை வணங்கப் பூவும் நீரும் உள ஆதலாலும் யமனுல் முனியப்படத் தேவையில்லை என்கிருர். "வானந் துளங்கிலென் மண் கம்பமாகிலென் மால்வரையும் தானந்துளங்கித்தலைதடுமாறிலென்" என்று சிவபெருமானுக்கு ஆட்பட்டவர்களுக்கு ஈனம் ஒன்றுமில்லை என்று வீரமுழக்கம் செய்கிருர் எமது பெரும் தவமுதல்வர், பூதங்கள் தம் நிலை கலங்கினலும் கலங்காமல் இருப்பார்கள் ஈசனின் மெய் அடியார்கள்; "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு ஏரோ எம்பாவாய்" என்ற மணிவாசகரின் மணிவாசகமும் இப் பொருளையே குறிக்கின்றது. "நாமார்க்கும் குடியல்லோம்" என்றும் இன்னும் ஒரு வீர முழக்கம் செய்கிருர் சொல் அரசர்.

நூறுகோடி பிரமர்கள் ஆறுகோடி விஷ்ணுக்கள் இந்திரர்கள் அழிந்திருக்கிருர்களென்றும் இறைவன் ஒருவனே முடிவும் முதலுமில்லாதவனென்றும் கூறுகிருர்,

"நூறுகோடி பிரமர்கள்
நுங்கினர்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில்
இந்திரர்
ஈறிலாதவன் ஈசனொருவனே"

தேவர்கள் ஆன்மவர்க்கத்தைச் சேர்ந்தவர். பிரமவிஷ்ணுக்கள் தம்பதவியின் கால முடிவெய்த மானிடப் பிறவி எடுத்து மோட்சம் அடைவார்கள்.

சரியை கிரியை யோக முதிர்ச்சியினுல் ஞானம் கைவரப் பெற்றுல்தான் ஆன்மா விடுதலை அடைந்து வீட்டுப் பேற்றை அடையும். காண்பவன், காட்சி, காட்சிப் பொருள் யாவும் சிவம் எனக் கண்டு தெரிய வேண்டும். எங்கும் சிவமயம் என்று உணர வேண்டும், மனம், வாக்கு, காயம் மூன்றிலும் திருவடிஞானம் கைவரப் பெற்ற பொலிவு திகழவேண்டும். எச்செய்கை செய்தாலும் இறைவன் திருவடிக்கு அர்ப்பணிக்கும் செய்கையாக விளங்க வேண்டும், "ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள் ஞானத்தால் தொழுவேனுனை நானலேன்" என்று செப்புகிருர். ஞானமில்லாச் சரியை வழிபாடும் ஈற்றில் நிலையுள்ள பயனைத்தராது என்று சொல் அரசர் கூறுகிருர். பாவநாசத்திருக்குறுந் தொகையில் திருநாவுக்கரசு சுவாமிகள் இதைப்பற்றிய

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த

## கொடிக்கவி

[ சைவப்புலவர் திரு. இ. செல்லத்துரை அவர்கள் ]

( முற்ருெடர் —10 )

(ஈ) ஆன்மா உருவமாகிய அசத்தோடு சேர்ந்து அதுவேயாய் அதனை அறிந்தும், அருவமாகிய சத்தோடு சேர்ந்து அதுவேயாய் அதனை அறிந்தும் நிற்பது. அங்ஙனம் ஆன்மா உருவம் அருவம் இரண்டினையும் தன்னின் வேருகப் பொருந்தி நின்று அறிதலால் அவ்வான்மா (உருவமும்) அசத்தும் அன்று; (அருவமும்) சத்தும் அன்று; அவற்றின் வேறுபட்டதொரு பொருளாம். அதனுல் அது சதசத்து எனப்பட்டது. அது, அசத்து சத்து என்னும் இரண்டினையும் போல விளங்கித் தோன்றி அவற்ருேடு ஒப்ப நில்லாததாய், விளங்காததொரு சூனியம்போல நிற்பது மற்றதாய், மலரினிடத்துள்ள மணம் உருவமும் அருவமுமற்று அம்மலரினிடத்து அடங்கித் தோன்றுவது போல அசத்திலும் சத்திலும் சார்ந்ததன்வண்ணமாய் நின்று அடங்கித் தோன்றுவதோர் இயல்பினை உடையதாம்.

[உ+ம்:—
அருவுருவந் தானறித லாயிழையா யான்மா
அருவுருவ மன்ருகு முண்மை — யருவுருவாய்த்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

குரோதி ௵ சித்திரை மீ
உசுவ வெள்ளிக்கிழமை

## கீரிமலையைப் புனிதத்தலமாக்குக

ஓர் ஆலயத்தை மத்தியில் அமைத்து அதனைச் சூழ ஒரு நகரமமைப்பது இந்துக்களுடைய கொள்கை மதுரையென்னும் நகரம் திருவாலவாயை நடுவண் கொண்டுள்ளது. திருவாரூர் என்னும் நகரம் புற்றிடங் கொண்ட பெருமானாலயத்தை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இத்தகைய நகரங்களில் வசிக்கும் மக்கள் எப்பொழுதும் சிவனை மறவாமல் வாழ்வார்கள். தெய்வக் கொள்கை அவர்களிடத்தில் இயல்பாகவே நிலவியிருக்கும். அதனுல் அவர்கள் பாவங்களை விலக்கிப் புண்ணியங்களைப் புரியத் தூண்டப்படுவார்கள். நமது ஈழநாட்டின் வடபகுதியிலுள்ள கீரிமலை என்னும் தலம் நகுலேஸ்வரம் என்னும் சிவாலயத்தை இருதயத் தானமாகக் கொண்டுள்ளது. ஆகவே கீரிமலை சைவ மக்களுக்கு ஒரு புண்ணியத் தலமாகும். கீரிமலையிலுள்ள நீரூற்று மக்களுக்குப் பயன்படும்பொருட்டு அதன் நீர் தேங்கிநிற்க நம்முன்னோர்கள் ஒரு திருக்குளத்தை நிறுவினார்கள். அது நகுலேஸ்வரர் ஆலயத்துக்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் தீர்த்தக் குளமாகப் பண்டைக் காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. திருக்குளத்தைச் சுற்றியுள்ள கற்படிகள் சிறந்த வள்ளலாக நமது நாட்டில் பலசிவ புண்ணியங்களை இயற்றிய வல்லிபுரம் என்பவரால் கட்டப்பட்டதென்பர். குறித்த திருக்குளமும் அதனைச் சூழ்ந்துள்ள ஆலயங்களும் திருமடங்களும் அமைக்கப்பட்டுள்ள இடங்களைச் சைவாசாரப்படி பாதுகாக்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்து வைத்தல் சைவமக்களுடைய கடமையாகும். அக் காரணம் பற்றியே சென்ற 1963-ம் ஆண்டு மார்கழித் திங்களில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் நடைபெற்ற சைவமகாநாட்டில் கீழ் வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"சரித்திரப்பிரசித்தி வாய்ந்ததும் சைவ மக்கள் வழிபடும் ஆலயங்களைப் பெற்றதுமான கீரிமலையைப் புனிதத்தலமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை இச் சைவமகாநாடுகேட்கின்றது"

இக்காலத்தில் கீரிமலையின் புனிதத்தன்மையை உணராமலும் யாத்திரை நோக்கமின்றியும் இத்தலத்தை உல்லாசக்கொண்டாட்டத் தலமாக எண்ணிச் செல்பவர்கள் கெடுகின்றார்களென அறிகின்றோம். மது மாமிச உணவுகளைக் கொணர்ந்து களியாட்டங்களைப் புரிகின்றார்களாம். திருக்குளத்தில் குளிக்கும்பொழுதே சிலர் போதை வஸ்துக்களை அருந்துகின்றார்களாம். இவ்விதமாகச் சைவாசாரத்துக்குப் பங்கமாக நடந்துகொள்பவர்களைக் கீரிமலைப் புனிதத் தலத்தில் புகாவண்ணம்நிருவாகிகள்தடைசெய்யவேண்டும். இறந்தவர்களுக்கு அந்தியேட்டிபுரியும் மண்டபங்கள் திருத்தப்பட வேண்டும்.

வலிகாமம் வடக்கிலுள்ள இந்துசமய வளர்ச்சிச் சங்கங்களும் வடமாகாணத்திலுள்ள பல கிராமச்சங்கங்களும் கீரிமலையை ஒரு சைவப்புனிததலமாகப் பிரகடனம் செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றன. நமது நாட்டிலுள்ள பாராளுமன்றத தமிழ் அங்கத்தவர்களும் இவ்விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்திக் குறித்த தலத்தை ஒரு புனித நகரமாக்க உதவி செய்வார்களென எதிர் பார்க்கின்றோம் அநுராதபுரத்தையும் கதிர்காமத்தையும் புனிதநகரங்களாக்க நடவடிக்கை எடுத்ததுபோல இத் தலத்தையும் ஒரு சைவப் புனித நகரமாக்கி வைப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

—0—

# ஸ்ரீமத் இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்

இப் பெரியார் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் பரம்பரைச் சைவவேளாளர் மரபில் அவதரித்துத் தமது 14வது வயதில் பாரதநாட்டுக்குச் சென்று தமிழ் மொழி வடமொழி யிரண்டினையும் நன்கு பயின்றனர் சூரியனார் கோயில் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகரிடத்தில் சமய விசேட நிருவாண தீட்சையும் பெற்றுச் சைவச் சந்நியாசமும் பூண்டனர். சிதம்பரம் ஈசானிய மடம் ஸ்ரீ இராமலிங்கசுவாமிகளிடம் இலக்கண இலக்கியப் பயிற்சியும் பெற்றனர். சைவ சித்தாந்த சாத்திரத்தைத் தெளிவாகப் பயின்று தகுதி யுடையவர்களுக்கு அதனைக் கற்பித்தனர். தீட்சைப் பேறுடையவர்களே சைவசித்தாந்தத்தைப் படிக்கத் தகுதியுடையரென்பது அவரது கருத்து. சிவ சின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களைத் தரித்து சிவபூஜா துரந்தரராகப் பற்றற்ற முறையில் வாழ்க்கையை நடத்தினர்.

சிவக்கவிமணி சைவப்பெரியார் சுப்பிரமணிய முதலியார் வெளியிட்ட பெரிய புராணப் பேருரைக்கு உறுதுணையாக விருந்தவர். மாதவச் சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த சிவஞான பாடியத்தைத் திருத்தமாக வெளியிடத்துணிந்தவர். திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் என்னும் சைவசித்தாந்த நூல்களுக்குச் சிறந்த உரையெழுதி வெளியிட்டனர். இப் பெரியாரைப்பற்றி ஈழநாட்டில் பலருக்குத் தெரியாதிருப்பது அவர்களின் தவக்குறைவே. அவர் சிவபதமடைந்த தினம் விரோதி௵ சித்திரைமீ 10௨ தசமி அவிட்டங் கூடிய வெள்ளிக்கிழமை. வருடந்தோறும் அவருடைய குருபூசையை ஈழநாட்டுச் சைவ மக்கள் கொண்டாட வேண்டும். தமிழ்மொழியும் சைவ சித்தாந்த நெறியும் விருத்தியடைய அது நல்ல வழியாகும்.

——

# உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த... கொடிக்கவி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றியுட னில்லாது தோன்றாது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றேக்கு;
—சிவஞா. போ 7-ம் சூத். 3-ம் செய்.]

4. இருளாம் வெளி:—

மாயை கன்மம் ஆணவம் என்பவற்றைப் பொருந்தி அவற்றால் வரும் பயனை ஆன்மா அனுபவித்து நிற்கும் நிலை சகல நிலையாம். சகல நிலைக்கு வெளி என்றும் தீபம் (விளக்கு) என்றும் ஒளி என்றும் பெயர். மாயையானது ஆன்மா கன்மபலன்களை அனுபவித்தற்கும், அதனால் அவ்வான்மாவின் ஆணவ மறைப்பைக் குறைத்து அதன் அறிவைச் சற்றே விளக்கஞ் செய்தற்கும், 'விடிவாம் அளவும் விளக்குப்'போல நின்று உதவுதலினால் சகலநிலை வெளி எனவும் ஒளியெனவும் விளக்கெனவும் வழங்கப்படுவதாயிற்று இங்ஙனம் அறிவு விளக்கமடைந்துவரும் சகல நிலையிலும் ஆன்மா ஆணவ மூனைப்பு முற்றிலும நீங்கப்பெறுமல் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையதாய் நிற்றலின் இச் சகல நிலையை(யும்) * 'இருளாம வெளி' என அடைகொடுத்து ஓதினார்.

*"சகலத்திலே அஞ்ஞானமாகிய மாயாபோகத்தைப் புசிப்பிக்குமல்லாமல் ஞானத்தினை உணர்த்தாது. ஞானம் சுத்தத்திலேயல்லாமல் உண்டாகாது. ஆகையால் சகலமும் போகத்தைப் புசிப்பிக்கிற நிமித்தமாகக், கேவலத்திற்கு இது தீபமென்றும் வெளியென்றும் சொன்னதலலாமல், இதுவுய அஞ்ஞானமேதப்பாது."

இருளாம் வெளி என்ற தொடர் இருள் ஆம் தன்மையையும் உணர்த்தி நின்றது. இருளாந்தன்மை என்றதனால் ஆணவமலம் உயிரோடு கலந்து நின்று அதன் அறிவு இச்சை செயல்களை மறைக்கும் என்பதும், வெளியாந்தன்மை என்றதனால் (அங்ஙனம் மறைத்து நிற்பினும்) மாயை தனு கரண புவன போகங்களாய் உயிருக்கு வேறாய் நின்று அதன் அறிவு இச்சை செயல்களை விளக்கும் என்பதும் உணர்த்தப் பட்டன.

உ+ம்:—
*விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து.
—திருவருட். 3-ம் அதி. 10-ம் செய்.

[விளக்கு விடியும்வரை கண்ணுக்குப் பொருள்களைக் காட்டுவதுபோல, மாயை திருவருட்சத்தியாகிய ஒளி தோன்றும் வரை உலகம் உடல் கருவிகளாய் நின்று, வினைக்கு ஈடாக உயிரின் அறிவு இச்சை செயல்களை விளக்கும்.]

*புகலுமல மொழித்தற்குக் கலாதிமுதன் மாயை
பொருந்தியிடு மரனருளாற் போதந்தீபஞ்
சகலமெலா முடனுய வாறு போலுந்
தருமருளை மலமுயிர்கள் சாரரமன் மறைக்கும்
இகலிவரு மிவையுணரி லிருள் வெளியாந் தன்மை
யெய்துமவகை தன்செய்தி யிலங்கு விந்து
பகர்வரிய வுணர்வாகி யொளியா யுள்ளப்
பான்மையினு லொருநாதம் படருந் தானே.
—சிவப். 87-ம் செய்.

["ஆணவமல மறைப்பை நீக்குதற்பொருட்டுச் சிவத்தின் அருளினுலே சுத்தமாயா காரியமான வாக்குக்களும் கலையாதி தத்துவங்களும் ஆன்மாவை வந்து பொருந்தும். தீபமானது அதைச்சேர்ந்த தண்டு தகழி நெய் திரி முதலிய பகுதிகள் எல்லாவற்றுடனுங் கூடிப் பிரகாசித்து எரிவதுபோல ஆன்மாவினறிவு இவ்வாக்குக்களோடும் தத்துவங்களோடும் கூடி விளக்கமுறும். அவ்வாறு வாக்குக்கலை முதலியவற்றால் அறிவைத் தருகின்ற திருவருளை ஆன்மாக்கள் அரிந்து பொருந்தாதபடி ஆணவமலம் மறைத்து நிற்கும. இங்ஙனம மாறுபட்டுவரும மலமாயைகளின் இயல்பை அறியுமிடத்து இருளும ஒளியும் போன்ற தன்மையுடையனவாம். ஆன்மா அறிவைப்பொருந்தும் முறையும் அம்மாயா

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## நீதி வடிவான இறைவனை ... ... ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

மையை உலகுக்கு வெளிப்படுத்தும் அருள் வள்ளலாகிய இறைவன் சோழமகாராசனின் மகனை உயிர்ப்பித்துக் காட்சி கொடுத்தமையை

"தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார் வானவர் பூமழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்".

என்னும் செய்யுளால் வருணிக்கின்றார். ஆகவே, நாமும் நீதி நெறியாகிய தரும வழியிலே ஒழுகினால் இறைவனைக் காணலாம்; அவன் திருவடியை அடையலாம்.

"மனத்துக்கண் மாசிலனாதல்" தருமமென்பது திருவள்ளுவநாயனார் கருத்து. அவர் மனமாசு நீங்குதற்குச் சாதகமாக அநுட்டிக்க வேண்டிய விரதங்களுள் பலவற்றைத் தம்முள்ளே அகப்படுத்தி நிற்குஞ் சிறப்புடையனவாய அருளுடைமை, புலான் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை ஆகிய விரதங்களைப பற்றி விரித்துக் கூறியுள்ளார். இவ் விரதங்களின் பயன்களைப்பற்றித் திருமுறைகள் மேலும மேலுவ வற்புறுத்திக்கூறும். இவற்றுள்ளும் தாமறிந்த மெய்ந்நூல்களுள்ளே சொல்லப்பட்ட அறங்களுள் வாய்மையின்மிக்கதில்லையென்ற கருத்தில் திருவள்ளுவநாயனார்,

"யாமெய் யாக்கண்டவற்று ளில்லை யெனைத் தொன்றும்
வாய்மையி னல்ல பிற"

என்று கூறியுள்ளார். "அகந் தூய்மை வாய்மை யாற் காணப்படும்" என்ற அவருடைய வாக்குக்கிணங்க அப்பர் சுவாமிகளும் "வாய்மைமே தூய்மையாக" என்று திருவாய் மலர்ந்தார்.

இங்ஙனம் தூய்மை எய்தி மேனுள்ளத்தில இறைவனுடைய ஞானச் சுடரைக் காணலாமென்ற பொருவில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

"பொய்யா நாவதனாற்
புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின் றெரியும்
விளக்கேயொத்ததேவர்பிரான்"

எனறு பாடியுள்ளார். திருவடி யாத்திரைக்கு யோக்கியதை வாய்மையைச் சாதிப்பதே யென்பது, "பொய்யுரையா தன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்னும் அப்பர் திருவாக்கால் உணரப்படும் மேலே குறித்த விரதங்களை விட நேரே நன்னெறி காட்டும் சைவ சாதனம் ஸ்ரீ பஞ்சாட்சரம்.

"காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்
குய்ப்பது
வேத நான்கினும்
மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே"
(சம்பந்தர் தேவாரம்)

"நமச்சிவாயவே ஞானமுங்
கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்
றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி
காட்டுமே"
(அப்பர் தேவாரம்)

எனவே நாம் நன்னெறிப் படவேண்டுமானால் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை,

"ஒல்லையாறி உள்ளமொன்றிக்
கள்ளமொழிந்து வெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து
காம வினையகற்றி"

ஓதவேண்டும். ஓதினால் அதன் வடிவமாயும் நீதியின் வடிவமாயுமுள்ள இறைவனைக்காணலாம்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த....

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

காரியங்களின் செயலும் என்னவெனில், மூலாதாரத்தில் விளங்கும் விந்து தத்துவத்திலிருந்து சொல்லுதற்கரிய ஞானமாத்திரைக்கு ஏதுவாகியும் பரசரீரத்தினுள்ளாகப் பிரகாசமாய் விளங்கியும் ஆன்மா அறியும் அறிவுக்கீடாக ஒப்பற்ற சூக்குமை வாக்குத்தோன்றி உந்தித்தானத்திற்குச் செல்லும ]

**5. இரவு:**

இரவு என்றது கேவல நிலையை. ஆன்மா தனு கரண புவன போகங்களிலே பொருந்தாததாய். பேரிருளில் அலர விளித்த விழிபோல ஆணவமலம் ஒன்றினலேயே பீடிக்கப்பட்டதாய், - அம்மலமேயாய், - அறிவு இல்லாததாய் இருப்பது கேவல நிலையாம.

உ+ம்:—

*ஓங்கிவரும் பலவுயிர்கண் மூன்றவத்தை பற்றி
யுற்றிடுங்கே வலசகல சுத்தமென வுணர்வர்
ஈங்குவருங் கலாதியோடு குறியுருவ மொன்று
மின்றிமல மன்றியென்று மில்லையெனு மியல்பாய்
ஆங்கறிவை யறிவரிதா யறிகருவி யணையா
வாதலினு *லிருண்மருவு மலர்விழிபோ லதுவாய்
நீங்கும்வகை யின்றிநித்த வியாபகமா யங்க
ணிற்பதுகே வலமென்று நிகழ்த்தது நூலே.

—சிவப். 33-ம் செய்,

[பக்குவத்தினலே உயர்ந்து வரும் எண்ணில்லாத உயிர்களும் மூன்று அவத்தைகளைப் பொருந்தி நிற்கும். அவற்றைக் கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என்று அறிஞர் சொல்லுவர். அவற்றுட் கேவலாவத்தையாவது இச்சகலாவத்தையில் நிகழும் கலையாதி தத்துவங்களும் பரவுடம்பு சூக்குமவுடம்பு தூலவுடம்புகளுமின்றி ஆணவமலம் ஒன்றேயன்றி வேறொன்றும் இல்லை என்னும் தன்மையுடையதாய், அறிதற்கேதுவாகிய கருவிகள் கூடா ஆதலாலே அவ்விடத்தே ஒரு பொருளையும் அறியக்கூடாததாய், இருளைப் பொருந்திய விழித்த கண்போல அம்மலவிருளிலே அழுந்தி, அதனை விட்டு நீங்கும் வகையின்றி, பிறப்பிறப்பும் ஏகதேசத்தன்மையுமின்றி, ஆணவ மலத்தோடு மாத்திரம் கூடி நிற்பதென்று ஆகமங்கள் சொல்லும் ]

"*இருண்மருவும் அலர்விழிபோல் அதுவாய்:—

கண் ஒன்று; அதன் ஒளி ஒன்று; ஒளிக்குக்காணுங் குணம் ஒன்று; காணுந்தொழில் ஒன்று; கண் இருளோடு கூடிய பொழுது விழித்திருப்பினும், இருள் மறைப்பால் ஒன்றையும் காண்பதில்லை. இதனல் கண்ணுக்காதல் அதன் ஒளிக்காதல் ஒளியின் காணுங் குணத்துக்காதல் ஒரு கேடில்லை. காணுந் தொழிலொன்றே அவ்விருள் மறைப்பினுல் நிகழவில்லை. அதுபோல, ஆன்மாவுக்காவது ஆன்ம அறிவுக்காவது அவ்வறிவின் அறியுங் குணத்துக்காவது யாதொரு கேடின்றி, அது மலமறைப்பினுல் அறியுந்தொழில் நிகழாமல், மறம் என்றும் தான் என்றும் பிரிப்பின்றி அம்மலவிருளில் அழுந்தியிருக்கும், அதுவாங் - ஆணவ மலத்தோடு அம்மல மாத்திரையாய் இருத்தல்"

—சிவப், உரைக்குறிப்பு - திருவிளங்கம்.

\+ கேவல சகல சுத்தம் என்றுமூன் றவத்தை ஆன்மா
மேவுவன் கேவ லந்தன் உண்மைமெய் பொறிகள் எல்லாங்
காவலன் கோடுத்தபோது சகலனும் மலங்கள் எல்லாம்
ஓவினபோது சுத்தம் உடையன்உற் பவந்து டைத்தே.

- சித்தி. 4-ம் சூத. 37-ம் செய்.

* அறிவிலன் அமூர்த்தன் நித்தன் அராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்கள் இல்லான்
குறியிலன் கருத்தா அல்லன் போதத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னேடும் வியாபிகே வலத்தி லான்மா

—சித்தி, 4-ம் சூத். 3[illegible]-ம் செய்

[+ ஆன்மா, கேவலம் சகலம் சுத்தம் என மூன்று அவத்தை எய்துவன். அவற்றுட் கேவலமாவது தன் இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றித் தன்மாத்திரையே உளனுதலாம். பின்பு தனு கரணதியோடும் முதல்வன் கூட்டக்கூடி அவை ஒருபுடை விளங்கும் அவதரத்திலே சகலனுய, அதன்பின்பு பஞ்ச மலங்களும் நீங்கிப் பிறவி ஒழிந்து சிவத்தோடு கூடி அவ் இச்சாஞானக் கிரியைகள் எங்கும் வியாபித்து விளங்கும் அவதரத்திலே சுத்தமுடையனும்.

* ஆன்மா உடம்பு முன் இல்லாதவனும், கலாதி அறிவோடு முன் சேர்தல் இல்லாதவனும், புத்தி குணம் எட்டினையும (ஏனைப்போக்கிய காண்டக கருவிகளையும) முன் பொருந்தாதவனும், இச்சை முன் இல்லாதவனும், அறிவு முன் இல்லாதவனும், ஒரு தொழிலும் முன் இல்லாதவனும், தனக்கென ஒரு சுதந்திரம் முன் இல்லாதவனும், போகத்தில் முன் கொள்கை இல்லாதவனும், தோற்றக்கேடுகள் முன் இல்லாதவனும், [illegible] தேசியாதல் முன் இல்லாதவனுமாய் கேவலாவத்தையில் ஆணவமலத்தோடு மாத்திரையே கூடி நிற்பன்.]

—தொடரும்,

இவ்வாரம் 10-5-64 — 16-5-64

## உங்கள் பலன் ?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

வெற்றிக்குக் கடுமையாக உழைக்க வேண்டிவரும் செலவு அதிகரிப்பு இரகசிய எதிரிகளின் தொல்லை அந்நியர் அயலவர் உதவி என்பன உண்டாம்,

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

புது முயற்சிகளில் வெற்றி நிச்சயம். பண இலாபம் உண்டாம் புகழும் சமூக வெற்றியும் நிச்சயம், நிம்மதி இருக்காது,

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், [illegible]ம் பாதம்.

புது முயற்சிகளில் எளிதில் வெற்றிபெறுவீர் பழைய முதலீடுகள் நற்பலனைத்தரும். எதிரிகளுக்கு இடையூறும் உமக்குப் புகழும் உண்டாம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

உடல்நிலை ஊறுபடும். அலுவலகத்திலும் சச்சரவு உண்டாம், பணமளவில் நல்ல வாரம், தடைகளைத்தாண்டி எண்ணியவண்ணம் நடந்துகொள்வீர்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்த[ர]ம் 1-ம் பாதம்.

எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம்- உதவியாளர்கள் மிக உதவுவர். சுகவீனங்களுக்குஇடமுண்டு. குடும்பநிலை குழம்பலாகஇருக்கும்,

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஞாயிறு திங்கள் செவ்வாய் காலை எச்சரிக்கை. குடும்பக்கவலைகளும் சுகவீனங்களும் உண்டாம். வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு.

**துலாம்,** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

குடும்ப நிலைமை குழம்பலாக இருக்கும். செலவுகள் அதிகமாகும, ஆனால் போதிய வருவாயும் பெறுவீர். செவவாய் புதன் வியாழன் காலையை எச்சரிக்கையோடு கழிககவும்,

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

சிறு விபத்துக்களுக்கும் இடமுண்டு, உடல்நிலை ஊறுபடும். பணக்கவலை உண்டாம், வியாழன் வெள்ளி சனி காலை எல்லா அலுவல்களிலும் எச்சரிக்கையாக இருக்கவும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம், உமது முயற்சிகளில் இலகுவாக வெற்றிபெறுவீர். இனத்தவருடன் சச்சரவுகள் உண்டாம். குடும்ப நிலைமையும் அவ்வளவு நிறைவாக இருக்காது.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1. 2ம், பாதம்

இரகசிய எதிரிகளால் இடையூறுண்டாம். உமது இனத்தவரும் சில தொல்லைகளை உண்டுபண்ணுவர். வயிற்றுக்கோளாறுகளுண்டாம். சொந்தப் பிரச்சினைகள் தீர்வுறுதிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி

உடல்நிலை ஊறுபடும். எதிரிகளால் தொல்லைகளும் வழக்குக் கஷ்டங்களும்உண்டாம். பணமளவில் நல்லவாரம், நிலபுல இலாபம் நிச்சயம்.


### ஜாதக பலன்

இலவச ஜாதக பலன்.
விபரமறிய, புதிய 10 சதம்
தபாற்தலையுடன்எழுதுங்கள்,
மேலைப்புலோலிநூல்நிலையம்,
பருத்தித்துறை, (இலங்கை)

Melaippuloly Noolnilayam,
Point Pedro. (Ceylon).

M 34 8, 15-5-64,


**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்பத்தில் அமைதி தொடர்ந்து நிலவும். எதிரிகளுக்கு இடையூறுநிச்சயம். நண்பர்கள் மிக உதவுவர். இடமாற்றம் ஏற்படலாம்.

## ஈசன்திருவடியன்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரிய கருத்துக்களைக் கூறுகிறார்.

'வேத மோதிலென்
வேள்விகள் செய்கிலென்
நீதிநூல் பலநித்தல்பயிற்றிலென்
ஓதியங்கமோராறும் உணரிலென
ஈசனை உள்குவார்க்கன்றி
இல்லையே''

என்றும்,

"கோடிதீர்த்தங்கலந்து
குளித்தவை
ஆடினாலும் அரனுக்கன்பில்லை
ஓடும் நீரினை [யேல்
ஓட்டைக்குடத்தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனே
டொக்குமே''

வேதங்கள் ஓதினுலென்ன வேள்விகள் செய்தாலென்ன நூல்பல கற்றுல் என்ன கோடி தீர்த்தங்கள் ஆடினுலென்ன அரனுக்கு அன்பில்லாவிடின் அவற்றினுல் நிரந்தரமான பிரயோசனமில்லை என்கிறார்: ஓட்டைக்குடத்துள் இடும் நீர் தவறுது வெளியேறும் தன்மைபோல அன்பில்லாச் சரியை வழிபாடு பயனற்றதாய்விடும், வேண்டுவது இறைவனிடத்து அயராத அன்பு ஒன்றே அன்புடையார் எல்லாம் உடையர்.

'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது ஆரும் அறிவிலார்''

என்னும் திருமூலர் வாக்கும் இந்தப் பெரிய உண்மையையே உணர்த்துகிறது.

"தேடிக் கண்டுகொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணுத்
தேவனை என்னுளே தேடிக்
கண்டுகொண்டேன்''

அப்பர் சுவாமிகளின் தேவாரங்களை நாள்தோறும் மெய்யன்போடு ஓதி உணர்ந்து அன்பு நெறியில் நிற்போமாக.


உத்தரவாதம்! உயரிய வேலை! நீடிய உழைப்பு!
சிறந்த அழகு! இவைகள் அனைத்தும் அமையப்பெற்ற

**பவுண், வைர ஆபரணங்களுக்கு**

சிறந்த இடம்:

# எல். கே. எஸ்.

# "தங்க மாளிகை"

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன் : 281. தந்தி : ஜுவல்லர்ஸ்.


### யோகர்சுவாமிகள் ஞாபகார்த்த விரிவுரைகள்

பொதுமக்களுக்குச் சமய அறிவை ஊட்டி அவர்கள் வாழ்க்கையைச் சிறப்பித்தற்காக சுவாமிகளின் அன்பர்கள் கிராமங்கடோறும் வெள்ளிக்கிழமைகளில் திருவிளையாடற்புராணசம்பந்தமான விரிவுரைகளை நிகழ்த்துவிக்கத் தீர்மானஞ் செய்துள்ளனர்.

### பன்னிரு திருமுறை ஆராய்ச்சிப் பேருரை

"வருடந்தோறும் நிகழும் பன்னிரண்டு மாத இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் மாதத்திற்கு ஒன்றுகப் பன்னிரண்டு ஆராய்ச்சிப்பேருரைகளைச் சைவத் தமிழ்வல்ல சான்றேரைக்கொண்டு நிகழ்த்துவித்துச் சைவ இளைஞர்களிடையே பரிபூரணமான சமயப்பொது அறிவை வளர்க்க வேண்டும்'' என்னும் தீர்மானம் 3 5-64 ல் கூடிய வடமாநிலச் சைவ இளைஞர்மாமன்ற நிருவாக சபையில் நிறைவேற்றப்பட்டது. மேலும் இப்பேருரைகளை ஆற்றவல்ல பெரியோர்களது இசைவைப் பெறுவதற்காய பூர்வாங்க முயற்சிகளை மேற்கொள்வதாகவும் 'சி,பொ த.ப.' (H.S.C) வகுப்புப் பாடத்திட்டத்தில் புத்தசமயம் சேர்க்கப்பட்டமைபோல, சைவசமயத்தையும் ஒரு பாடமாகச் சேர்ப்பித்தற்காய முயற்சிகளை யாழ்ப்பாணம் சைவ பரிபாலண சபை, சைவாசிரிய சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம்ஆதியன மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதாகவும் இம்மன்றம் தீர்மானித்தது,

### தேகவியோகம்

உரும்பராய் கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான பிரதம குருக்களும், அகில இலங்கைச் சைவக்குருமார் சபையால் வேதபுராண சூட்சும தர்சனி என்ற கௌரவப்பட்டம் சூட்டப்பட்டவருமான பிரமஸ்ரீ கு. பொன்னையாக் குருக்களின் பிரிய பத்தினியார் திருமதி. ப.பா. ஞானம்பிகை அம்மாள் 2-5-64 சனிக்கிழமை இரவு இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

அன்பு, தயை, கொடை முதலிய நற்பண்புகள் நிறைந்த ஞானம்பிகை அம்மாவின் பூதவுடல் சைவ சமயாசார முறைப்படி தகனம் செய்யப்பட்டது. அன்னாரின் ஆன்மா சாந்தியடையச் சைவநன்மக்கள் பிரார்த்தனை நடத்தினர்,

### ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் குருபூசையும் மலர் வெளியீடும்

சிதம்பரம். சித்திரை 17. ஸ்ரீ-ல-ஸ்ரீ. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள், திராவிட மாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ. மாதவச் சிவஞான யோகிகளின் 108-வது ஆண்டுக் குருபூசை விழாவைச் சித்திரை ஆயிலியத்தன்று நடத்தி, மேற்படி யோகிகள் அருளிச் செய்துள்ள கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தரவிருத்தி என்ற நூலை அச்சிட்டு 191-வது மலராக வெளியீடு செய்துள்ளார்கள்.

இ. மா. பா. "இளமுனி" நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டு விற்பனவு விளம்பரம்

கரம்பன் மேற்கு
நாகமுத்து தேசிங்கு
—வழக்காளி

இல. M.B, 5466

எதிராக

யாழ்ப்பாணம் தீவுப்பகுதி
வேலணை கிழக்கு
1. பெருமாள் வேலுப்பிள்ளை
2. பெருமாள் சின்னத்தம்பி
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M.B. 5466-ம இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக கப்படும் ஒரு துண்டுக்காணியை 1964-ம்ஞு ஆனிமீ 6உ சனிக கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 799/20-ம், 5-3-63 தொடக்கம் 24-6-63 வரைக்குப் ரூபாய் 400-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 166/95-ம். கோட்டுச் செலவில ரூபா 100 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோவிற்பற்று வேலணை கிழக இறை "வரணியம்புலம்" நெற் பரப்பு நாலு, வீடும், செய்பயிர் வான்பயிரும், வடக்கெல்லைக காணிக்குளிருக்கும் கிணற்றிற் பங்கும் தூர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும், இதற்கெல்லை கிழக்கு பெருமாள் சின்னத்தம்பி யினுதனம், வடக்கு தேசிங்கு பெண் அன்னக்கிளியினுதனம, மேற்கு அருணசலம் சிவகுரு நாதரினுதனம் தெற்கு அம்பல வாணர் பெண் இராசம்மாவினுதனம், இதடங்கலாற் சொரியலாய் மூன்றிலிரண்டு (2/3) பங்குப் அதறகுச் சேர்ந்தவைகளும், பதிவிலககம் C 98/101,

அ. வெற்றிவேலு
கொமிஷனர்.

19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்,
M 32 8-5-64,

கோட்டு விற்னவு விளம்பரம்
யாழப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
வழக்கு இலக்கம் M.B. 4396.

சுண்டிககுழி
ஈச்சமொட்டைவீதி
அந்திரேசு டானியல்அப்புத்துரை
—வழககாளி

எதிராக

நல்லூர் 1, மைககேல் யோசேவ் வும் மனைவி
2. விக்டோரியாவும்
—எதிராளிகள்.

இவ்வழக்கில் எனக்குககிடைத்த உததரவின்படி கீழ்காணும் ஆதனம் 1964-ம்ஞு யூனமீ 13உ (13-6-64, சனிககிழமை முற்பகல் 10 மணி தொடககம் அநதக காணிக்குள் நின்று பிரசிதத ஏலததில் விற்கப்படும்,

தீர்வைததொகை:-முதல்வட்டி ரூபா 3650, மேலும் 2500 ரூபாவுககும் 13-11-61 தொடககம் 8-2-62 வரைக்கும் வருடமொன்றுக்கு 12%வீத வட்டியும் அதன் பின் முழுததொகைக்கும் இறுக கும் வரைககும் வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும். இதில் கோட்டில் கட்டப்பட்ட ரூபா 500 குறைய. கோட்டுச்செலவுப ரூபா 247-95 சதமும் இதில் ரூபா 150 குறைய:

காணி விபரம்:


வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "காககையான் வளவு" நிலப்பரப்பு 1¼, மேற்கில் ஒழுங் கையில்ருந்து இந்தக்காணககுப் போய்வர கை ஒழுங்கை உரிததும், வடக்கெல்லைககாணியிலிருக கும் கிணற்றில் பங்கும். இதற்குப் போய்வர வழிவாய்க்கால் உரித்தும் மற்றும் இதற்குச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழககு சுப்பையா மனைவி எமிலிமுததம்மாவினுதனம், வடக்கு நல்லதம்பி மனைவி மாரிமுத்துவினுதனம், மேற்கு முன் குறிப்பிட்ட கை ஒழுங்கை முகப்பும் இந்தக்காணியின் மிகுதி ஆதனமும், தெற்கு ஆதனத்தின் மிகுதிப்பகுதியும், தம்பிமுத்து தம்புவினதும்-

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.

613 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 28-4-64,
M 29 8-5-64

# பகிரங்க ஏலவிற்பனவு விளம்பரம்

மானிப்பாய் முதலியார் கனகசபை வீதியில் 14 கட்டிடத்திற்கான நிலங்கள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் T. R. 43-ம் இலக்க வழக்கில் ஆனைக்கோட்டை மடதர்மத்துக்குரிய கீழ்க்காணும் 14 துண்டு ஆதனங்களை அத்தர்மத்தின் "டிரஸ்திகளாகிய" துரைச்சாமி தியாகராசாவும், செகராசசிங்கம் நமசிவாயமும், முத்துச்சாமி சண்முகநாதனும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 1964-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ந் திகதி விற்கத் தந்த கோட்டு உத்தரவின்படியும் அந்த ஆதனங்களை விற்றுவரும் பணத்தைக் கோட்டில் கட்டும்படி செய்த கோட்டுக் கட்டளைப்படியும் முதல் 7 துண்டு ஆதனங்களை 1964-ம் ஆண்டு ஆனி மாதம் 12ந் திகதி வெள்ளிக் கிழமை (12-6-64) காலை 9 மணி தொடக்கமும் மிகுதி ஆதனங்களை மறுநாள் 13-ந் திகதி சனிக்கிழமை (13-6-64) காலை 9 மணி தொடக்கமும் அந்தந்தக் காணிக்குள் நின்று பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்,




மானிப்பாய் இந்துக்கல்லூரி, மகளிர்கல்லூரி, பட்டினசபைக்கட்டிடம், மருதடிப் பிள்ளையார் கோவில், தேவாலயம், தபாற்கந்தோர், வைத்தியசாலை என்பவற்றுக்குச் சமீபத்தில் உள்ளது. தேவையான மின்சார வசதிகள் இலகுவில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் தேவையான விபரங்களை நல்லூர் No. 19 செட்டித்தெரு பிறக்றர் & நொத்தாரிசு C. T குமாரசுவாமி அவர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

தா. செல்லையா,
Commissioner, Auctioneer & Valuer
No. 37, Colombuthurai Road,
Chundikuli.

M 27. 7, 15-5-64

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம் சென் படறிக்ஸ்வீதி எஸ். எம். ஜோர்ஜ் வழக்காளி.
இல M. B. 3937 எதிராக
நருசோல்ட்வீதி யாழ்ப்பாணம் ஜி பெனடிக்ட் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M. B. 3937ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1964 ம் ஞு வைகாசி மீ 30ம் உ (30-5-64) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5475 உம் இன்னும் ரூபா 5000 த்துக்கு 2-3-61 தொடக்கம் 22-8-61 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன் மேல் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கொமிஷன் செலவு ரூபா 12 உம்,

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சுண்டிக்குளியிறை "குளத்துவயல்" பர நெல் இலா 4 குளி 5½ வீடும் செய்பயிர் வான்பயிர்களும் அதைச்சேர்ந்தவைகளும் இக்காணியில் மத்தியிலிருக்கும் கிழகசெல்லையிலிருக்கும் கிணற்றில் மேற்கோரமாய் ½ பங்குருத்தும். எல்லை கிழககு நீக்கலான் லூசஸினுதனம். வடக்கு றேட்டு மேற்கு எஸ். அந்தோனிப்பிள்ளைக்கும் பெண் எலிஸபெதுக்குமுரியவாதனம், தெற்கு யோஸேப் மாட்டினுக்கும் பெண் அடிலேயிடுக்குமுரியவாதனம், இதடங்கலும்,

133 பருத்தித்துறை றேட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்
28-4-64,

செ. விசாகரெத்தினம்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

M 31 8-5-64.

யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என் மூலமா... கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பா.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சங்கானை மேற்கு, செல்லப்பா கிருஷ்ணர் —வழக்காளி
இல M B 2413. எதிராக

காலஞ்சென்ற பொன்னம்பலம் கணபதிப்பிள்ளையின் ஆதனங்களின் பராமரிப்புககாரி சங்கானை கிழக்கு கணபதிப்பிள்ளை கைம் பெண் பொன்னம்மா —எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டின் M,B. 2413-ம் இலக்க வழக்கில் எனககுககிடைத்த கோட்டுககட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1964-ம்ஞு ஆனிமீ 10-ம்உ புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா. 6550-ம், ரூபா 6000-க்கு 4-8-58 தொடககம 4-11-58 வரை 8 வீதமான வட்டியும் அதன் மேல் முழுததொகைககும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், இதில் ரூபா 5750 கொடுபட்டது, மிகுதிக் கோட்டுச்செலவு ரூபா 45-62½ சதம்,

காணிகளின் விபரம்:

1, வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி பண்டததரிப்புககோவிற்பற்று பண்டத்தரிப்பு இறை "நெட்டிலானை வளிச்சையும், சரந்தனும் மறுபிரிவுகளும்" பர. நெ. இல. நூற்றி ஏழேகால் (பர நெ இல 107¼) கிணறும் வீடும் செய்பயிர் வானபயிர்களும். எல்லை கிழககு வயித்தி கனகசபைக்கும் பங்காளர்கட்கும் எதிராளிககும், சிமாவ்பிள்ளை பெண் விறிசத்தம்மாவிற்குமுரியவாதனம், வடக்கு சீயாப்பிள்ளை பெண் விறிசததம்மாவிற்கும், கந்தர் வேலாயுதருககுமுரியவாதனமும், சுடலை நிலமும், மேற்கு கந்தர் வேலாயுதருக்குரியவாதனமும், றேட்டும், சுப்பிரமணியர் வேலாயுதபிள்ளையின் உரிமைககாரருக்கும், சினனன் பெண் கதிராசியினுதனமும், தெற்கு சின்னன் பெண் சதிராசிக்கும் வயித்தி கனகசபைககுமுரியவாதனம். இதடங்கலும்,

2, ஷை பண்டத்தரிப்பு இறை 'கரந்தன் குஞ்சிகரந்தன்" பர, நெ. இல, நாற்பது (பர. நெ இல. 40) கிணறும் பனைகளும், எல்லை கிழககு குருநாதர் வயித்திலிங்கததிற்கும் பங்காளர்கட்கும் மறுபேர்கட்குமுரியவாதனம், வடககு எதிராளிக்கும் முருகேசு வேலுப்பிள்ளைக்கும் பங்காளர்கட்குமுரியவாதனம், மேற்கும் தெற்கும் வயித்தி கனகசபைககும் பங்காளர்கட்குமுரிய வாதனம், இதடங்கலும்.

காரைநகர், 1964-ம்ஞு சித்திரைமீ 25-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி.
கொம்மிஷனர்,

M 28 8—5—64,

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு தத்துவ வழக்கு இலககம் 137 G,

நாகமுத்து மாணிக்கம் பருததித்துறை விண்ணப்பகாரர்
Vs
கணபதிப்பிள்ளை செல்லையா Do பிரதிவாதி

மேற்குறித்த வழககில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழகாணும் ஆதனத்தை 1964-ம் ஆ ஆனிமீ 12-உ வெள்ளிககிழமை பிற்பகல் 3-00 மணியளவில் குறித்த ஆதனத்திலிடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனடாப்பு:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி. பருததித்துறை கோயிற்பற்று, பருத்தித்துறை வென்றிபாகுதேவன் குறிச்சியிலுள்ள "பெரிய பரப்பு" நிலப்பரப்பு குளி 13¾; இது உலாந்தா மேஸ்தர் V. சிவரத்தினத்தால் 1945-ம்ஆ புரட்டாசிமீ 15-ந் திகதி 181-ம் இலககததில் வரைதாரிக்கப்பட்ட படத்தின்படி நில, பர. குளி 11 20/32, அதற்குட்பட்ட 'B" என்றட்சரமிடப்பட்ட வீடும், எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை சந்திரசேகரத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடககும் மேற்கும் ஒழுக்கை, தெற்கு சதாசிவம் தியாகராசாவுக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளடங்கலிற் சொரியலாய் அரைவாசியும், குறிதத படததில் "X" என்றட்சரமிடப்பட்ட கிணற்றிலிதற்குரிய பங்கும், வழிவாய்க்காலுரிததும்.

க. நல்லலிங்கம்,

"சிவலிங்க நிலயம்" விற்பனை நிர்வாகஸ்தரும் விலைமதிப்பாளரும்
வி, மூ. றோட் Commissioner of Sales & Valuer.
பருததித்துறை 6-5-64.

M 30 8-5-64.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 3634

கொட்டடி, யாழப்பாணம் நாகலிங்கம் கைம்பெண் விசாலாட்சி -வழக்காளி.
எதிராக
தெல்லிப்பளை கிழக்கு நாகநாதி சிதம்பரப்பிள்ளையும் பெண் பொன்னம்மாவும் -எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M. B. 3634 ம் இலக்க வழககில எனககுக கிடைத்த கோட்டுககட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் ஒரு துண்டுக காணியை 1964 ம் ஞு ஆனி மீ 13 உ சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை:- முதல் வட்டி ரூபா 3500 ம் 22-9-1960 தொடககம் 5-2-1961 வரைககும் ரூபா 3000 கது 10 வீத வட்டியும அதன் பின் முழுத்தொகைக்கும் இறுககும்வரை 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபா 249-95 சதம். ஒம்முதல் வட்டி ரூபாயில் ரூபா 500 வட்டியின் வகையால் கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று தெல்லிப்பழை கிழக்கிறை "கிளானை" நிலப்பரப்பு 10 (பத்து) இதில் மேற்குப் புறமாக அறுதி விற்ற நிலப்பரப்பு 3 மூன்று, நீக்கி, மிகுதி நிலப்பரப்பு 7 (ஏழும்) அதற்குச் சேர்ந்தவைகளும்; எல்லை கிழககும் வடக்கும் தெற்கும் ஒழுங்கை மேற்கு இதிற் சொல்லப்பட்ட மிகுதிஆதனம்.

இவ்வேழு பரப்பு ஆதனம் யாழ்ப்பாணம் காணிப்பகுதிக் கந்தோரில் H 321/9-ம் இலககத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

261 ஆஸ்பத்திரி வீதி, நீ. அன்ரனிப்பிள்ளை
யாழ்ப்பாணம், 2-5-64. கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

M 33 7-5-64,

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 3ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 8-5-1964 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org